Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2011

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆலடியான் | Father/Husband Name | : அலங்காரம் |
| Age | : | Calling | : |
| Date | : 17.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி 2010ம் ஆண்டு பணி ஒய்வு பெற்றேன். கடந்த 29.11.2008ம் தேதி காலை 11.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது ராமசாமி நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 448/2008 பிரிவுகள் 457, 380 இதசன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் திரு. ரகுராமன் அவர்களது பார்வைக்கு வைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரை படித்து பார்த்தேனா என்றால் ஆம். அந்த புகாரில் வளையல்கள் குறித்து ஏதேனும் விவரம் உள்ளதா என்றால் இல்லை. அதேபோல் புகார் கொடுத்த நபரிடமிருந்து முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை. அதேபோல் புகார்மனுவில் 20 அல்லது 22 பவுன் திருட்டுபோனதாக எந்த விவரம் இல்லை என்றால் இல்லை. அதேபோல் எதிரிகள் 4 பேர் நோட்டம் விட்டு சமையல் அறைக்குள் இறங்கியதாக எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். புகார்மனுவில் ரஜினி மாலையை தவிர வேறு எந்த மாலையும் காணாமல் போனதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது)**